புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமே இருந்த மயில்கள் தற்போது திருச்சி, தஞ்சை, சிவகங்கை மாவட்டங்களுக்கும் செல்கின்றன. மேலும், விளை நிலங்களில் சென்று நெல் மணிகளை உண்பதைவிட அதிக அளவு சேதப்படுத்தவும் செய்கின்றன. இதனால் விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், சமூக விரோதிகள் சிலரால் மயில்கள் உணவுக்காகவும், மருந்துக்காகவும் வேட்டையாடப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். ஆனாலும், தமிழக மக்களிடம் மட்டுமல்லாமல் விலங்குகளிடத்திலும் அன்பும், அக்கறையும் கொண்டு யானைகளுக்கும் முகாம் அமைத்துப் பாதுகாத்து வரும் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் தேசியப் பறவை மயில்களைப் பாதுகாக்க விராலிமலையில் சரணாலயம் அமைக்கும் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் திருமதி ஆ. ரோகிணி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 33, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

33—

உணவுப் பொருள் வழங்குதல்

***40542—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை காவலர்களுக்கு பிரதிமாதம் வழங்கப்படும் ரேஷன் போல வனத் துறை காவலர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?

2005 செப்டம்பர் 23]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) காவல் துறை காவலர்களுக்கு பிரதிமாதம் வழங்கப்படும் ரேஷன் அரிசி போல வனத் துறை காவலர்களுக்கும் வழங்கும் உத்தேசம் இப்போது அரசிடம் இல்லை.*

திருமதி சி.எம். சூரியகலா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து சாதனை படைக்கும் எங்கள் அம்மாவின் பாதம் தொட்டு வணங்கி என்னுடைய வினாவைத் தொடர்கிறேன். நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது பாதுகாப்பு. இந்திய நாடு ஒரு தீபகற்ப நாடு. இந்த நாட்டினுடைய இயற்கை வளத்தைப் பாதுகாத்தால்தான், இயற்கையாகப் பெய்யக்கூடிய மழை, தட்ப வெப்ப நிலைகள் எல்லாம் சீராக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால்தான் வேளாண் உற்பத்தி, விவசாயிகளின் வாழ்க்கை ஆகியவை பாதுகாக்கப்படும். எல்லாத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற பெரும் முயற்சி எடுத்து வெற்றி கண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் துரித நடவடிக்கைக்கு ஏதுவாக இயற்கை வனச் சூழ்நிலைகளைப் பாதுகாக்க வனக் காவலர்கள் பெரிதும் உதவுகிறார்கள். வனத் துறை இரவு, பகல் பார்க்காமல் தனது பணியைச் சிறப்பாகச் செய்வதால், விலை உயர்ந்த மரங்கள், அரிய வகை விலங்குகள், மூலிகைகள், இசைக்குப் பெயர் போன மூங்கில்கள் பாதுகாக்கப்படுகின்றன. வனங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் சுற்றுச்சூழல் நன்றாக இருக்கும். வனக் காவலர்கள் காட்டை அழிக்கும் தேசத் துரோகிகளிடமிருந்து வனத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களது கடின உழைப்பைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறைக்கு வழங்கியுள்ளது போல, வனத் துறை சரகர்களுக்கு ஜீப் மற்றும் உடனுக்குடன் தொடர்புகொள்ள செல்போன்கள் மற்றும் சரணாலயங்களைப் பாதுகாத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் பைனாகுலர் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த – காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு ரேஷன் பொருட்களை சலுகை விலையில் வழங்குவது போல, வனக் காவலர்களுக்கும் ரேஷன் பொருட்களை சலுகை விலையில் வழங்க தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஆக்கபூர்வமான ஆலோசனை. ஆகவே, இது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி சி.எம். சூரியகலா.*

திருமதி சி.எம். சூரியகலா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 34, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

34—

பத்மநாபபுரம் கோட்டை

***18730—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையின் சுவர்களில் பழுது ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் அமைந்திருக்கின்ற பத்மநாபபுரம் கோட்டை தொல்லியல் துறையின் வசம் இல்லை. இருப்பினும், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தச் சுற்றுச் சுவரைப் பராமரிப்பது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS